செ.வெ.எண் · 1010

நாள் 16.11.2010

## செய்தி வெளியீடு

வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம், 2011–இல் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் / நீக்கல் / திருத்தல் / இடம் மாற்றுதல் ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களை அளிப்பதற்கான கால அவகாசம் 13–11–2010 (சனிக்கிழமை) அன்று முடிவடைந்துது. மேற்கண்ட காலகட்டத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்திடுவதற்காக 12,68,912 விண்ணப்பங்களும், பெயர் நீக்கம் செய்வதற்காக 15,844 விண்ணப்பங்களும் பெறப்பட்டன. மேலும் 74,359 விண்ணப்பங்கள் வாக்காளர் பட்டியலில் பதிவுகள் திருத்தத்திற்காகவும், 33,058 விண்ணப்பங்கள் அதே சட்டமன்ற தொகுதிக்குள் முகவரி மாற்றம் செய்திடுவதற்காகவும் பெறப்பட்டன. இறுதி வாக்காளர் பட்டியல் 05.01.2011 அன்று வெளியிடப்படும். அதில் புதிதாக சேர்க்கப்பட்ட வாக்காளர்களுக்கு தேசிய வாக்காளர்கள் தினமான 25.01.2011 அன்று நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் வாக்காளர் அடையாள அட்டை விநியோகிக்கப்படும்.

தலைமைத் தேர்தல் அதிகாரி,
தமிழ்நாடு

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை